# கனி கொடுக்கும் வருஷம்

## ஹலோ குட்டீஸ் நல்லா இருக்கீங்களா? *HAPPY NEW YEAR*

உங்களுக்குக் கதைன்னா ரொம்ப பிடிக்கும் தானே. இயேசப்பா சொன்ன ஒரு கதையை கேட்கிறீங்களா? ஒரு எஜமானுக்கு ஒரு திராட்சைத்தோட்டம் இருந்துச்சு. திராட்சைப்பழங்கள் கொத்துக் கொத்தாக தொங்குகிறத பார்க்கவே என்ன பிரமாதமாக இருக்கே. ஆனா இந்த அத்திமரம் மட்டும் ஏன் இன்னும் ஒன்னும் காய்க்கல என்று எஜமான் சொல்லிக்கொண்டே வந்தார். அவர் வந்ததைப் பார்த்த தோட்டத்திலே வேலை செய்யும் ஐயாவும் ஓடோடி வந்து ஐயா வணக்கம் சாலோம் என்றார். எஜமான் நல்லா இருக்கீங்களா? என்று ஐயா கேட்டதும், எஜமான் நான் நல்லா இருக்கேன். ஆனால் அந்த அத்திமரம் தான் நல்லாவே இல்லையே. நானும் முதல் வருஷம் பார்த்தேன் ஒரு காயும் காய்க்கவில்லை. இரண்டாம் வருஷம் பார்த்தேன் அப்பவும் ஒன்னையும் காணோம். இப்ப இந்த மூன்றாம் வருஷமும் ஒன்னைகூட பார்க்கவே முடியலை. அதற்கு ஊத்தின தண்ணீர், போட்ட உரம் நீர் பார்த்த வேலை எல்லாம் வேஸ்டா போயிருச்சு....அதனால ஒன்னு செய்யுங்க என்று எஜமான் சொன்னதும், தோட்டக்கார ஐயா என்னங்க ஐயா செய்யனும் என்று கேட்டார். அதற்கு எஜமான் கோபமாக அதை வெட்டிப் போடுங்க. சும்மா இருந்து மண்ணுக்குப் பாரமாயிருக்குது. நம்ம மனசுக்கும் பாரமாயிருக்குது என்றார். அதற்கு தோட்டக்கார ஐயா சொன்னார் ஐயா ஐயா அப்படி மட்டும் சொல்லாதீங்க, இந்த வருஷமும் இருக்கட்டும் நான் அந்த மரத்தை சுத்தி, நல்ல கொத்தி எருப்போட்டு தண்ணீர் பாய்ச்சுறேன். நிச்சயம் அது கனி கொடுத்திடும். அப்படி அது கனி கொடுக்கலைனா, அப்புறம் வெட்டிப் போடலாம் ஐயா என்று கெஞ்சி கேட்டதினால எஜமான் சொன்னார், எனக்கு என்னமோ அந்த அத்திமரம் காய்க்கும்னு நம்பிக்கையே இல்லை. என்னமோ நீங்க சொல்றீங்கனு விடுறேன். பாடுபடுறது நீங்க தானே. சரி நான் போயிட்டு வர்றேன் என்று சொல்லி எஜமான் தோட்டத்திலிருந்து புறப்பட்டார். குட்டீஸ் நம்முடைய எஜமான் பிதாவாகிய தேவன், நம் ஒவ்வொருவருக்கும் புது வருஷத்தையும், புது நாளையும், ஆசீர்வாதங்களையும் தந்து அதிலே தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று விரும்பி நம்மையெல்லாம் அவருடைய அத்திமரமாகவைத்திருக்கிறார்.  நாம் தேவப்பிள்ளைகளாக நடந்து கொண்டால் கனி கொடுக்கிறவர்களாக இருப்போம். கனி கொடுக்காவிட்டால்  நம்மேல் அவருடைய கோபம் வரும். அவருடைய கோபத்திலிருந்து நம்மை காப்பாற்றத்தான் பிதாகிட்ட நம் சார்பாக இயேசுவாகிய  தோட்டக்காரர் பரிந்து பேசிகிட்டு இருக்காங்க. அப்படித்தான் மன்றாடி நமக்காக 2025-இந்தப் புது வருஷத்தை கனி கொடுக்கும் வருஷமாக தந்திருக்காங்க. உரமாகிய வார்த்தையினாலும், தண்ணீராகிய பரிசுத்த ஆவியினாலும் நம்மைப் பெலப்படுத்தி, நம்மை கனி கொடுக்க வைக்கிறாங்க அதனால குட்டீஸ் நீங்களும் ஒவ்வொரு நாளும் கெட்ட காரியங்களைச் செய்யாமல் இயேசப்பாவுக்குப் பிடிச்ச காரியங்களைச் செஞ்சீங்கனா நீங்க தான் இயேசப்பாவுக்கு கனி கொடுக்கிற பிள்ளைகள். நிச்சயம் நீங்க கனி கொடுப்பீங்க. ***ALL THE BEST***.

### ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, இந்த 2025 புது வருஷத்தை தந்ததற்காக நன்றி. இந்த வருஷத்தின் ஒவ்வொரு நாளும் உமக்குப் பிரியமானதை செய்து, உமக்கு கனி கொடுக்கிற பிள்ளையாய் என்னை மாற்றுங்க நன்றி இயேசப்பா. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

### மனப்பாட வசனம்

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்.
உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.
சங்கீதம் 143:10

